8th November 1957]

THE HON. SRI M. A. MANICKAVELU : ரிசர்வ் பாரஸ்ட்டில் இருப்பதைத் தவிர மற்றதைக் கொடுக்க ஆட்சேபணை இல்லை. கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு தான் வருகிறோம். கனம் அங்கத்தினருக்குக்கூட தெரியும் சமீபத்தில் சேலத்தில் பல ஆயிரம் எக்கர் நிலம் கொடுத்திருப்பது.

SRI M. JAGANNATHAN : கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள விவசாயத்திற்கு லாயக்குள்ள நிலங்களையெல்லாம் அங்குள்ள ஏழை மக்களுக்கும் ஹரிஜனங்களுக்கும் விநியோகம் செய்ய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாக கனம் அமைச்சர் சொன்னார். அந்த முயற்சி எவ்வளவு தூரம் பயன் அளித்தது என்பதை அரசாங்கம் தெரிவிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு தனி கேள்வி போட்டால் புள்ளி விவரங்களை தயாரித்துச் சொல்லுகிறேன்.

SRI M. K. SOMASUNDARAM : எவ்வளவு காலத்திற்குள் நிலங்களைப் பிரித்து ஹரிஜனங்களுக்கு பட்டா செய்து கொடுக்கப்படும்என்பதை தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஹரிஜனங்களுக்கு மாத்திரம் அல்ல நிலம் இல்லாத எல்லா ஏழைகளுக்கும் தான் கொடுக்கப்படும். எவ்வளவு காலம் ஆகும் என்று திட்டமாகச சொல்ல முடியாது. எவ்வளவு சீக்கிரத்தில் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அதைச் செய்ய முடியும்.

SRI S. LAZAR : Sir, will anybody be benefited if these lands are assigned to them?

THE HON. SRI M. A. MANICKAVELU : It depends upon the person and the mentality of the person who gets them.

SRI P. G. MANICKAM : விவசாயத்திற்கு லாயக்கான தரிசு நிலங்களை அங்குள்ள ஏழை மக்களும் ஹரிஜனங்களும் உழுது வருகிறார்கள். அந்த நிலங்களை அவர்களுக்கே பட்டாசெய்து கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் தீவிரமாக எடுத்துக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இம்மாதிரியான நிலங்களைத் தான் சிவோஜிமா கல்ட்டிவேஷன் என்று சொல்வது. அப்படிக் கொடுக்கத் தான் ஏற்பாடு செய்து கொண்டு வரப்படுகிறது.

Rest-houses and sanatoria for workers.

* 115 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any representation was made on 17th July 1957 by the Tamil Nad Trade Union Congress to build rest-houses and sanatoria at places like Coonoor, Kodaikanal and Mahabalipuram to enable the workers to enjoy rest during convalescent period and to spend the leave taken for the purpose of recouping their health; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) Government examined the suggestions and found them impracticable for the present.